மூன்றாந் தவணைப் பரீட்சை - 2024

தரம் 10 | **இஸ்லாம்** | **3 மணி 10 நிமிடம்**

பகுதி – I

சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. ‘அகீதா’’ எனும் சொல் இஸ்லாமிய வழக்கில் குறிப்பது.
   1. நம்பிக்கை சார்ந்த விடயங்கள் 2. கடமைகள் சார்ந்த விடயங்கள்
   3.கொடுக்கல் வாங்கல் சார்ந்த வியங்கள் 4. குடும்பம் சார்ந்த விடயங்கள்

2.’’அர்ரூஹானிய்யாத்’’ எனும் பிரிவில் அடங்கும் நம்பிக்கை சார்ந்தவிடயங்கள்
   1. அல்லாஹ் பற்றிய நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்கள்
   2. வேதங்கள் பற்றிய நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்கள்
   3. சட உலகிற்கும்,புலன்களுக்கும் அப்பாற்பட்ட விடயங்கள்
   4. மறுமை பற்றிய விடயங்கள்

3. ஈமான் 70ற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது அதில் மிக உயர்ந்தது
   1. லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமா 2. ஸகாத் வழங்குவது
   3. ஹஜ்ஜிற்கு செல்வது 4. நோன்பு நோற்பது

4. ‘மு.ஃ.மீன்களில் சிறந்தவர் நற்குணமுடையவரே’’ எனும் கூற்று
   1. குர்ஆன் வசனமாகும் 2. ஹதீஸ் ஆகும்
   2. இஜ்மா முடிவாகும் 4. கியாஸ் முடிவாகும்

5. நபி ஷீத்(அலை) அவர்கள் பெற்ற சுஹுபுகளின் எண்ணிக்கை
   1. 50 2. 30 3. 40 4. 10

6. அதிக நீர் என்பதை குறிக்கும் சொல்
   1. அல் மாஉல் கஸீர் 2. ஆல் மாஉன் கலீல்
   3. அல் மாஉத் தாஹிர் 4. ஆல் மாஉல் முஸ்த.ஃ.மல்

7. தயம்முமின் உறுப்புக்கள்
   1. முகமும் இருகால்களும் 2. முகமும் தலையும்
   3. முகமும் இருகைகளும் 4. முகமும் மணிக்கட்டு உட்பட இருகைகளும்

8. நஜீஸின் வகைகள்
   1. 2 2. 3 3. 4 4. 5

9. சாப்பிட அனுமதிக்கப்பட்ட இறந்த பிராணிகள்
   1. மாடு 2. ஆடு 3. ஒட்டகம் 4. மீன்

10. ‘இபாதத்’’ எனும் அறபு மொழிச் சொல்லுக்குரிய கருத்துக்குப் பொருந்தாத சொல்
    1. வழிகாட்டல் 2. வழிபடுதல் 3. சிரம்பணிதல் 4. வணங்குதல்

11. உடலோடும் செயலோடும் தொடர்பான இபாதத் அல்லாதது
    1. தொழுகை 2. நோன்பு 3. இ.ஃ.லாஸ் 4. ஹஜ்

12. தொழுகையில் ‘துஆஉல் இஸ்திப்தாஹ்’’ ஓத வேண்டிய இடம்
    1. சுஜூதில் 2. ஸுறா பாதிஹாவின் பின்
    3. ருகூவில் 4. ஆரம்ப தக்பீர் கட்டியவுடன்

13. ‘நப்ஸுல் லவ்வாமா’’ என்பதன் கருத்து
    1. அமைதியடைந்த உள்ளம் 2. தன்னையே நொந்து கொள்ளும் உள்ளம்
    3. தீமையை ஏவும் உள்ளம் 4. நன்மையை ஏவும் உள்ளம்

14. ‘அல் - மு.்.னி’’ என்ற இறை திருநாமத்தின் பொருள்
1. கொடுப்பவன் 2. ஆக்குபவன்
3. கூலி கொடுப்பவன் 4. சேல்வந்தனாக ஆக்குபவன்

15. ‘வரஉ’’ எனும் சொல்லின் மூலம் உணர்த்தப்படுவது
1. மனத்தூய்மை 2. பேணுதல் 3. பற்றற்ற வாழ்வு 4. உளத்தூய்மை

16. ‘வஹி கைரு மத்லுவ்’’ என்பதன் கருத்து
1. ஓதிக்காண்பிக்கப்பட்ட வஹி 2. ஹதீஸுல் வஹி
3. ஹதீஸுன் நபவி 4. ஓதிக்காண்பிக்கப்படாத வஹி

17. நபி(ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக அருளப்பட்ட இறைவசனங்களின் எண்ணிக்கை
1. 7 2. 9 3. 5 4. 3

18. அல் குர்ஆனை நூலுருப்படுத்தவேண்டும் என ஆலோசனை வழங்கிய நபித்தோழர்
1. அபூபக்கர் 2. ஸைத்பின் தாபித் (றழி)
3. உமர் (றழி) 4. உஸ்மான் (றழி)

19. ‘ஜாமிஉல் குர்ஆன்’’ என அழைக்கப்பட்ட கலீபா
1. அலி (றழி) 2. உஸ்மான் (றழி) 3. முஆவியா (றழி) 4. உமர்(றழி)

20. இஜ்மாஉ வின் வகைகள் ‘தெளிவான இஜ்மாஉ’’ வைக் குறிக்கும் சொல்
1. இஜ்மாஉஸ் ஸ்கூதி 2. இஜ்மாஉல் கௌலி
2. இஜ்மாஉஸ் ஸரீஹ் 4. இஜ்மாஉ அக்ஸரிய்யா

21. அர்கானுல் கியாஸில் ‘இல்லத்’’ எனப்படுவது
1. பொதுக்காரணி 2. ஊர்வழமை
3. அடிப்படைத்தீர்வு 4. தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை

22. இஸ்லாத்திற்கு முன்பட்ட அரேபியாவில் கோத்திர அமைப்பிலான சமூகமே காணப்பட்டது. **‘கோத்திரம்’** எனும் சொல் குறிப்பது.
1. ஷுஊப் 2. அஸபிய்யா 3. கபீலா 4. ஷைகு

23. நபி (ஸல்) அவர்கள் தனது த.்.வாப் பணியினை ஆரம்பிக்கும் போது அன்னாரின் வயது
1. 50 2. 60 3. 45 4. 40

24. நுபுவ்வத் ஐந்தாம் ஆண்டில் முஸ்லிம்கள் ஹபஷாவிற்கு செல்லும் போது அங்கு ஆட்சி புரிந்த மன்னரின் பெயர்
1. ஹரக் 2. கிஸ்ரா 3. நஜ்ஜாஸி 4. முகௌகிஸ்

25. நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்ற யத்ரிப் நகரம் நபி (ஸல்) அவர்களின் வருகையின் பின் எப்பெயர் கொண்டு மாற்றப்பட்டது.
1. தாயிப் 2. மதீனதுன் நபவி 3. குபா 4. பஸரா

26. ‘ஸீரத் றஸுல்லாஹ்’’ என்ற பெயரில் நபி(ஸல்) அவரகளின் வாழ்கை வரலாற்றை முதலில் நூலுருப்படுத்தி வழங்கியவர்
1. அப்துல் மலிக் பின் மர்வான் 2. முஹம்மத் இப்னு இஸ்ஹாக் (றஹ்)
3. இப்னு ஹிஷாம் (றஹ்) 4. ஸபிய்யுர்ரஹ்மான் முபாறக்பூரி (றஹ்)

27. இஸ்லாமிய பொருளாதார முறைமையின் சிறப்பம்சங்களுள் அல்லாதது.
1. தெய்வீகத்தன்மை 2. எவருக்கும் அநீதி நிகழாமை
3. சொத்துக்களைப் பெருக்குதல் 4. நெகிழ்வுத்தன்மை

28. பொருளீட்டல் வணக்கமாக வேண்டுமாயின் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல் அல்லாதது.
   1. தூய எண்ணம்   2. ஷரீஆவின் அனுமதி
   3. நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்   4. பிறரின் உதவிய எதிர்பார்த்தல்

29. இரும்பினை மனிதத் தேவைகளுக்கு பயன்படுத்தும் தொழில்நுட்ப அறிவைப் பெற்ற நபி
   1. ஸகரிய்யா (அலை)   2. இப்றாஹிம் (அலை)
   3. தாவூத் (அலை)   4. சுலைமான் (அலை)

30. 'வியாபாரம் தொடர்பான சட்ட விளக்கமுள்ளவர்களைத் தவிர ஏனையோர் சந்தையில் வியாபரத்தில் ஈடுபடக் கூடாது'' எனக் கூறிய கலீபா
   1. உமர் (றழி   2. உஸ்மான் (றழி)
   3. உமர் இப்னு அப்துல் அஸீஸ்   4. ஹாறூன் றஷீத்

31. வியாபரத்தின் அடிப்படைகளுக்குள் உள்ளங்காத விடயம்
   1. ஈஜாப்   2. கபூல்   3. வியாபாரி   4. ஷாஹித்

32. 'இஸ்லாமிய சட்டவியல் ஒரு சர்வதேசப்பார்வை'' எனும் நூலின் ஆசிரியர்
   1. அறிஞர் சித்திலெப்பை   2. அபுல்ஹஸன் அலி அந்நத்வி
   3. C.V.வீரமந்திரி   4. கலாநிதி சுக்ரி

33. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகளுள் அடங்காதவை
   1. உயிர் வாழ்வதற்கான உரிமை
   2. ஆண்களை ஆண்களும் பெண்களை பெண்களும் திருமணம் செய்யும் உரிமை
   3. நீதி பெறுவதற்கான உரிமை
   4. சொத்துக்களை பாதுகாப்பதற்கான உரிமை

34. 'மக்னா காட்டா'' எனும் உடன்படிக்கை இடம் பெற்ற நாடு
   1. ஈரான்   2. சிரியா   3. இங்கிலாந்து   4. ஸ்பெய்ன்

35. இளமை சீராக அமைய வேண்டிய கடமைகளுள் அல்லாதது
   1. ஹராமான விடயங்களைத் தவிர்த்தல்   2. தூரநோக்கோடு செயல்படுதல்
   3. தியாக உணர்வுடன் செயற்படல்   4. சமூகஇனஅழிப்பிற்கு ஒத்துழைத்தல்

36. மனிதன் பெற்றுள்ள அருட்கொடைகளுள் மிக முக்கியமானது
   1. செல்வம்   2. கால்நடைகள்   3. ஆரோக்கியம்   4. நீண்ட ஆயள்

37. 'உண்டும் கடித்தும் வயிற்றை நிரப்புவது பற்றி உங்களை எச்சரிக்கிறேன்'' எனக் கூறிய ஸஹாபி
   1. அபூ உபைதா (றழி)   2. ஆலி (றழி)   3. உமர் (றழி)   4. அபூஹுரைரா (றழி)

38. உள அரோக்கியம் பாதிக்கப்படவதற்கான காரணிகளுள் அல்லாத விடயம்
   1. மித மிஞ்சிய ஆசை   2. இரவு வணக்கங்களில் ஈடுபடல்
   3. ஷைத்தானிய தூண்டல்கள்   4. கட்டுப்பாடற்ற வாழ்வு முறை

39. 'வஸதிய்யா'' என்பதன் பொருள்
   1. தீவிரமாக செயற்படல்   2. நெகிழ்வுத்தன்மையோடு நடத்தல்
   3. நடு நிலையைப் பேணல்   4. சகஜமாக பழகுதல்

40. 'உனது நடையில் மத்திய தரத்தை கடைப்பிடி' எனும் உபதேசத்தை கூறியவர்.
   1. இப்றாஹிம் (அலை)   2. தாவூத் (அலை)
   3. லுக்மான் (அலை)   4. முஹம்மத் நபி (ஸல்)

(40 புள்ளிகள்)

பகுதி – II

முதலாம் வினா உட்பட மொத்தம் 05 வினாக்களுக்கு விடை தருக

01. 1. இஸ்லாமிய வழக்கில் அகீதா என்றால் என்ன?
2. ஈமானின் வகைகள் எவை?
3. தொழுகையின் முக்கியத்துவம் பற்றி ஹதீஸ் ஒன்றை குறிப்பிடுக
4. உளப் பரிசுத்தம் ஏற்பட கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. இஸ்லாமிய பொருளாதார முறையின் சிறப்பம்சங்கள் இரண்டினை எழுதுக?
6. சேவைத் தொழிலின் வகைகள் யாது?
7. நரகை காணாத மூன்று கண்களும் எவை?
8. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் இரண்டு தருக.
9. பிள்ளைகளுக்கு எவ்வாறான பயிற்சிகளைக் கற்பிக்குமாறு இஸ்லாம் கூறுகிறது.
10. பிக்ஹுல் அவ்லவிய்யாத் என்றால் என்ன?

(10x2=20 புள்ளிகள்)

02. 1. இபாதத் என்றால் என்ன?
2. ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களைக் குறிப்பிடுக.
3. இபாதாவின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

03. 1. இஜ்மா என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
2. இஜ்மா ஒரு துணை சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்களை முன்வைக்குக.
3. இஜ்மாவின் வகைகள் மூன்றையும் குறிப்பிட்டு விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

04. 1. ஜாஹிலிய்யாக் கால மக்களின் மோசமான நடத்தை 4 தருக.
2.ஜாஹிலிய்யாக் கால குடும்ப அமைப்புக்களில் 3 இனைக்குறிப்பிடுக.
3.ஜாஹிலிய்யாக் கால மக்களிடம் காணப்பட்ட ‘**சமயம்**’ தொடர்பான கொள்கைகளை விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

05. 1. இஸ்லாத்தில் உழைப்பு மக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் எவை?
2. தவக்குல் என்றால் என்ன என்பதை விளக்குக.
3. பொருளீட்டலின் போது கவனிக்க வேண்டிய ஷரீஅத் வரையறைகள் எவை?

(2+3+5=10 புள்ளிகள்)

06. 1. மனித உரிமை என்றால் என்ன?
2. இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் எவை?
3. நீதியரசர் C.V.வீரமந்திரி எழுதிய நூலில் மனித உரிமைகள் தொடர்பாக குறிப்பிடும் கருத்து யாது?

(2+3+5=10 புள்ளிகள்)

07. ஏதாவது இரண்டையுப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

1. உடல் உள ஆரோக்கியம்
2. இளமையும் பணியும்
3. நடு நிலை பேணல்
4. பிக்ஹுல் அவ்லவிய்யாத்

(2x5=10 புள்ளிகள்)